# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 13,992—1964 මාර්තු 20 වැනි සිකුරාදා—1964.3.20**

13,992 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு மாச்சு மாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 73 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | — | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 77 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 80 | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 80 | நாணயவிதம் .. .. .. | 81 |


## பதவிகள்—வெற்றிடம்

### "இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம்: அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்ட/இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதிலும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தரத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்பட ஆளாவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாரானால் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாரானால், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

## முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 26 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மாதம் 21 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

பேர்னுட் த சில்வா,
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஆண்டு பங்குனி (மார்ச்) மீ 13 ந் உ.*

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 1956 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு, மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) B), 2 (ii) (C) என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

**6. யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அசசேவைக் காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

**7. வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவராயும், வேண்டிய தகைமைகளைக் கொண்டவர்களாயுமுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்குவிதிக் கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடமுடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சாத்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில, தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அபபரீட்சாத்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணபத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

## இலங்கை இராணுவம்

### நிரந்தரப் படையினர் நியமனம்

இலங்கை இராணுவ நிரந்தரப் படையில் இலங்கை பொறியியலாளர்கள் பிரிவில் காலி ஸ்தானங்கள் இருக்கின்றன.

(அ) கீழ்க்காணப்படும் ஒவ்வொரு நியமனங்களுக்கும் எதிரே கூறப்பட்டுள்ள தகுதிகளையுடைய விண்ணப்பக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :—

| நியமனம் | கூறு | விசேட தகுதிகள் |
|---|---|---|
| (1) கோப்ரல்—தொழில் முகாரி (மின்சார இயந்திர மேற்பார்வையாளர்கள்) பிரிவு " ஏ ", வகுப்பு 2 | இலங்கை பொறியியலாளர்கள் .. | கனிஷ்ட பாடசாலைத்தராதரப் பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை நுண்தொழில் கல்லூரியில் மின்சார இயந்திர (குறைநேர) வகுப்பில் 1 ம் வருட பூர்த்தி செய்தும், அரசாங்க அல்லது பிரக்யாதி பெற்ற பொறியியல் ஸ்தாபனத்தில் 2 வருடங்கள் கீழ் மேற்பார்வையாளராக வேலை செய்து அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் ; அல்லது |
| | | கனிஷ்ட வகுப்புத் தகுதியுடன் அரசாங்க அல்லது பிரக்யாதி பெற்ற பொறியியல் ஸ்தானத்தில் குறைந்தது 3 வருடங்கள் மின்சார இயந்திர மேற்பார்வையாளராக கடமையாற்றி அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் |
| (2) படையினர்—நுண் தொழில் எழுதுவினைஞர்கள் (தொழிற் சேவைகள்) பிரிவு " பீ ", வகுப்பு 3 | இலங்கை பொறியியலாளர்கள் .. | கனிஷ்ட பாடசாலைத்தராதரப் பரீட்சை சித்தியடைந்திருப்பதுடன் இலங்கை நுண்தொழில் கல்லூரியில் ஏதாவது ஒரு வர்த்தக தராதரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளவராக இருத்தல் வேண்டும் ; அல்லது |
| | | கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைந்தவர்களாகவும், நிமிடத்தில் 15 அல்லது 20 சொற்கள் தட்டெழுத்துத் தட்டக் கூடியவர்களாகவும், அரசாங்கப் பகுதியிலோ அல்லது வர்த்தக ஸ்தாபனத்திலோ எழுதுவினைஞராகத் தொடர்ந்து ஒரு வருட அனுபவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டும் |

(ஆ) விண்ணப்பக்காரருடைய தகுதியைப் பரிசோதிக்குமுகமாக தேர்வுக்கு முன் விண்ணப்பக்காரர் ஒரு தேர்ச்சிப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) 1 ம் பந்தி (அ) பிரிவில் கேட்கப்பட்டிருக்கும் தகுதிகளில்லாதவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**2. பொது நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும்—

(1) இலங்கையராக இருக்க வேண்டும் ;

(2) 1964 ம் ஆண்டு மே மாதம் 1 ம் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் 1964 ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் திகதியன்று 40 வயதிற்குட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும் ;

(3) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் இவற்றுள் ஏதாவது ஒரு மொழியில் 5 ம் வகுப்புச் சித்தியடைந்திருக்க வேண்டும் ;

(4) படைத்தளபதியின் திருப்பிதற்கேற்ப வைத்தியப் பரிசோதனை ஒன்றில் சித்தியடைய வேண்டும் ;

(5) 5 அடி 4 அங்குலத்திற்குக் குறையாத உயரம் உடையவர்களாக இருக்க வேண்டும்

படைத்தளபதி தன் விருப்பத்தின்படி புறநடையான தகுதிகள் உடையவர்களை அவர்கள் 40 வயதிற்கு மேல் இருந்தாலும், அல்லது 5 அடி 4 அங்குலத்திற்குக் குறைவான உயரம் உடையவர்களாக இருந்தாலும், அல்லது இரண்டு தகுதிகளையுமே பூர்த்தி செய்யாதவர்களாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) பழைய சேவைக்காலத்தை உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். அப்பேர்பட்டவர்கள் மேற்கூறப்பட்ட பொது நிபந்தனைகளுடன் கீழ்க்காணப்படுபவைகளையும் உடையவர்களாக இருந்தால் :—

(1) இவர்கள் பிரித்தானிய சாம்ராஜ்சியப் படையுடன் இலங்கைப் பாதுகாப்புப் படையில் சேர இதில் குறைந்தது ஒரு வருட காலமாவது சேவை செய்தவர்களாக இருக்க வேண்டும் ;

(2) இவர்கள் இராணுவத்தில் இருந்து விலகியபொழுது இவர்களின் நடத்தை ஆகக்குறைந்தது "மிகவும் நல்லது" என்றாவது தரம் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.

3. **சேவைக்காலம் :**

ஒரு போர்வீரர் 12 வருட சேவையில் பதிவு செய்யப்படுவார். இதில் 5 வருட பூரண சேவையின் பின் மீண்டும் 7 வருடங்கள் மேற்படையிலும் சேவை செய்யப்படலாம். பின் இராணுவத்தில் இருந்து விலக்கப்படுவார். ஒரு போர்வீரர் 12 வருட பூரண சேவையின் பின் பிற காரணங்களால் மீண்டும் சேவை செய்ய அனுமதிக்கப்படுவார். இச்சேவைக்காலம் எல்லாவற்றினதும் மொத்தம் 32 வருடங்களாகும்.

4. **சம்பளமும் செலவுப்படிகளும் :**

இராணுவ நிரந்தரப்படையினருக்கு 1961 ம் ஆண்டு சித்திரை மாதம் 28 ந் திகதியன்று வெளியான 12,395 ந் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான இராணுவ சம்பள நிர்ணயப்பட்டியலின் இரண்டாம் பிரிவின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**(அ) தொழிற் குறிப்பீடு கொடுக்கப்பட்ட போர்வீரரின் சம்பளம்**

தொழிற் குறிப்பீடு கொடுக்கப்பட்ட கோப்ரல் அல்லது அதற்கு நிகரான அல்லது அதற்கும் குறைவான தராதரத்தில் நியமனம் பெறும் போர் வீரருக்கு அவருடைய தொழிற் குறிப்பீட்டுப்பிரகாரம் வழங்கப்படும் சம்பள விவரம் பின்வருமாறு :—

| தராதரம் | "X" தொழிற்பிரிவு | | | "A" தொழிற்பிரிவு | | | "B" தொழிற்பிரிவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா | வகுப்பு 1 ரூபா | வகுப்பு 2 ரூபா | வகுப்பு 3 ரூபா |
| படையினர் | 1,470 | 1,170 | 1,020 | 1,350 | 1,110 | 960 | 1,260 | 1,050 | 930 |
| லான்ஸ்-கோப்ரல் | 1,620 | 1,320 | 1,170 | 1,500 | 1,260 | 1,110 | 1,410 | 1,200 | 1,050 |
| கோப்ரல் | 1,980 | 1,680 | 1,530 | 1,860 | 1,620 | 1,470 | 1,770 | 1,560 | 1,410 |

(ஆ) தொழிற் குறிப்பீடு கொடுக்கப்பட்ட சாஜன் அல்லது அதற்கு நிகராக அல்லது அதற்கும் மேலான தராதரத்தில் நியமனம் பெறும் போர்வீரருக்கு ஒரு வருடத்திற்கு அவரவர் தொழிற் குறிப்பீட்டின் பிரகாரம் வழங்கப்படும் சம்பளம் :—

| தராதரம் | உயர்தர கைதேர்ந்த தொழிலாளருக்கு | | ஏனைய தொழிலாளருக்கு |
|---|---|---|---|
| | பிரிவு "X" வகுப்பு 1 ரூபா | பிரிவு "A" வகுப்பு 1 ரூபா | பிரிவு "B" வகுப்பு 1 ரூபா |
| சாஜன் | 2,520 | 2,430 | 2,280 |
| ஸ்ராப் சாஜன் | 2,880 | 2,790 | 2,550 |
| வறண்ட் உத்தியோகத்தர், வகுப்பு 2 | 3,180 | 3,000 | 2,760 |
| பேரணி சேனை விடுதிச் சாஜன் | 3,360 | 3,180 | 2,940 |
| வறண்ட் உத்தியோகத்தர், வகுப்பு 1 | 3,540 | 3,360 | 3,120 |

**(இ) வாழ்க்கைச் செலவுப்படியும் விசேட செலவுப்படியும் :**

வாழ்க்கைச் செலவுப்படியும் விசேட செலவுப்படியும் அரசாங்க விகிதப்படி கீழ்க்காணப்படும் பிரிவில் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் :—

(1) இராணுவச் செலவில் உணவு கொடுக்கப்படாத விவாகமான போர்வீரர்களுக்கு ;

(2) பாசறைக்கு அப்பால் வசிக்க அனுமதி வழங்கப்பட்ட விவாகமாகாத போர்வீரர்களுக்கு ;

(3) விடுதலையில் இருக்கும்போது பாசறையில் உணவு கொள்ளாத விவாகமாகாத போர்வீரர்களுக்கு.

(ஈ) இராணுவச் செலவில் உணவு கொடுக்கப்படும் விவாகமாகாத போர்வீரர்களுக்கு :—

(1) அரசாங்க விகிதப்படி கொடுக்கப்படும் வாழ்க்கைச் செலவுப்படி விசேட செலவுப்படி ஆகியவற்றில் மொத்தத்திற்கும் ;

(2) இராணுவத் தளபதியால் நிர்ணயிக்கப்படும் உணவுச் செலவுக்கும் உள்ள வித்தியாசத் தொகையே வழங்கப்படும்.

**(உ) வீட்டு வாடகை :**

இராணுவ அல்லது அரசாங்க வீடுகள் வழங்கப்படாத விவாகமான போர்வீரர்களுக்கும், பாசறையில் இடவசதிகள் வழங்கப்படாத அல்லது அரசாங்க ஊழியர்களின் நிபந்தனைகளின்படி தன்னுடைய நியமனத்திற்கு வழங்கப்படும் விசேட வீடுகள் வழங்கப்படாத விவாகமாகாத போர் வீரர்களுக்கும் வீட்டு வாடகை வழங்கப்படும்.

(ஊ) அரசாங்க அல்லது இராணுவ வீடுகளில் வாசம் செய்யும் போர்வீரர்கள் வீட்டு வாடகை பெறுவதற்கு அருகதையற்றவர்களாவார்கள்.

**(எ) சலவைச் செலவு :**

(1) பாசறையில் வாசம் செய்யும் போர்வீரர்களின் இராணுவ ஆடைகள் இராணுவச்செலவில் சலவை செய்யப்படும் ;

(2) பாசறையில் வாசம் செய்யாத போர்வீரர்களுக்கு இராணுவத் தளபதியின் நியமனங்களின் படி சலவைச்செலவு வழங்கப்படும்.

**(ஏ) சேவைக்காலச் சம்பள உயர்வு :**

ஒவ்வொரு நிரந்தரப் படையினருக்கும் ஒவ்வொரு 5 வருடகால சேவைக்கும் சேவைக்கால சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 4.11 சதம் வழங்கப்படும்.

**(ஐ) பதவிச் சம்பள உயர்வு :**

கோப்ரல் தொடக்கம் வறண்ட் உத்தியோகத்தர் வகுப்பு 2 வரை அவரவர்களின் பதவி நிலையில் ஒவ்வொரு 4 வருட சேவைக்கும் பதவிக்கான சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 7.50 சதமும், வறண்ட் உத்தியோகத்தர் வகுப்பு 1 க்கு ஒவ்வொரு 4 வருட சேவைக்கும் பதவிக்கான சம்பள உயர்வாக மாதம் ஒன்றுக்கு ரூபா 15 ம் வழங்கப்படும்.

5. 1 ம் பந்தியில் கூறப்பட்ட காலி ஸ்தானங்களுக்குரிய விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஒ) விண்ணப்பக்காரர்கள் விளம்பரத்தின இறுதியில் கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தைப் பார்த்துத் தங்கள் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து அனுப்ப வேண்டும். அச்சிட்டோ, அல்லது தட்டெழுத்தாலோ அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ;

(ஓ) விண்ணப்பங்கள் 1964 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முன்னதாக இக்காரியாலயத்தில் இருக்கும்படியாக "இராணுவ ஆள்திரட்டும் உத்தியோகத்தர், இராணுவ ஆள்திரட்டும் அலுவலகம், இராணுவ தலைமைக் காரியாலயம், தபால் பெட்டி இலக்கம் 553, கொழும்பு" என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்திலும் அதனை அனுப்பும் தபால் உறையின் மேலும் "நிரந்தரப் படையில் சேரும் விண்ணப்பம்" என்று எழுதப்படல் வேண்டும் ;

(ஔ) விண்ணப்பக்காரர் எந்தப் பிரிவில் சேர விரும்புகிறார் என்பதை கூறு, நியமனம் ஆகியவற்றைச் சரியாகக் கவனித்து விண்ணப்பிக்க வேண்டும் ;

(க) விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டிய சான்றுப் பத்திரங்கள் (மாதிரிப்பிரதிகள் மாத்திரம்) :—

(1) பிறப்புச் சான்றுப் பத்திரம். (ஒருவரின் பிறப்புப் பதிவு செய்யப்படாதவிடத்து) பிரதம பதிவு அதிகாரியால் கொடுக்கப்பட்ட விசேட வயதுச் சான்றுப் பத்திரம், ஞானஸ்நான சான்றுப்பத்திரமோ அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கிணங்க கொடுக்கப்பட்ட பிறப்புச்சான்றுப் பத்திரமோ அல்லது பிறப்புக்குறிப்போ எதுவும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது ;

(2) கூடுதலான கல்வித்தகுதியைக் காட்டும் சான்றுப் பத்திரம் ;

(3) விண்ணப்பக்காரரின் நன்நடத்தையைக் காட்டுமுகமாகத் தகுதிவாய்ந்தவர்களால் கொடுக்கப்பட்ட மூன்று தற்போதைய நற் சான்றுப் பத்திரங்கள். விண்ணப்பக்காரர்கள் ஏற்கனவே தொழிலில இருப்பவரானால் இவைகளில் ஒன்று தங்கள் மேலதி காரியிடம் இருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

குறிப்பு :

(1) விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டால் மேற்கூறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது காட்ட வேண்டும் ;

(2) விண்ணப்பத்துடன் சான்றுப் பத்திரங்களின் மூலப்பிரதிகள் அனுப்பப்பட்டு அவைகள் காணுமற் போனால் அதற்கு இராணுவத் தலைமைக் காரியாலயம் பொறுப்பேற்கமாட்டாது.

(கா) தபாலில் தவறும் அல்லது தாமதமாகும் விண்ணப்பங்களுக்குரிய குற்றச்சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசி நாள் வரை தாமதப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் குறித்த நாளில் இக்கந்தோரில் கொடுக்கப்படாவிடில் அது விண்ணப்பக்காரரின் குற்றமேயாகும் ;

(கி) விண்ணப்பத்துடன் தங்கள் சொந்த முகவரி எழுதப்பட்ட முத்திரை ஒட்டப்படாத தபால் உறை ஒன்றை அனுப்புவர்களுக்கு விண்ணப் பங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும். அப்படி அனுப்பாதவர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது ;

(கீ) அரசாங்க சேவையில் உள்ளவர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் காரியாலய தலைமை அதிகாரிக்கூடாக அனுப்ப வேண்டும் ;

(கு) அரசாங்க பகுதித்தலைமை அதிகாரிக்கூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் உரிய காலத்தில் இக்கந்தோரில் கொடுபடாவிடில், அவைகள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் தங்கள் காரியாலயத்தில் கொடுக்கப்பட்டதென்பதை தாமதமாகியதற்குரிய காரணத்தை யும் பகுதித் தலைவர்கள் குறிப்பிட வேண்டும். அல்லாவிடில் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது ;

(கூ) நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியான விண்ணப்பக்காரர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்குரிய இடம், திகதி, நேரம் ஆகியவைகள் தெரிவு சபையாரால் அறிவிக்கப்படும். அப்படி அறிவிக்கப்பட்டவர்கள் வந்து நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும் ;

(கெ) விண்ணப்பக்காரர்கள் இராணுவத்தில் சேரத் தகுதி உடையவர்களென்த் தெரிவு சபையாரால் தெரிவு செய்யப்படின் அப்பேர்ப் பட்டவர்கள் தங்கள் சொந்தச் செலவிலேயே கொழும்பில் ஒரு, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வைத்தியப் பரிசோதனைக்கு தோற்ற வேண்டும் ;

(கே) தெரிவு செய்யப்பட்டோர் படையினராக அல்லது அதற்கு நிகரான பதவியில் இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு இராணுவப் பயிற்சி நிலையத்திற்கு அல்லது வேறு ஏதாவது ஒரு இடத்திற்குப் பயிற்சிக்கு அனுப்பப்படுவர் ;

(கை) 21 வயதிற்கு உட்பட்டவர்களை அவர்களின் பெற்றோர்களோ அல்லது பாதுகாவலர்களோ தங்கள் சம்மதத்தை எழுத்து மூலம் தெரிவித்தாலன்றிச் சேர்த்துக் கொள்ள முடியாது ;

(கொ) தெரிவு செய்யப்பட்டு இராணுவத்தில் சேர்க்கப்பட்டோர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசாங்க மொழிக் கொள்கைச் சட்டத்திற் கிணங்க ஏற்கனவே உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் எந்தச் சட்டத்திற்கும் அமைந்து நடக்க வேண்டும் ;

(கோ) ஒரு விண்ணப்பக்காரரை யாராவது அங்கீகாரம் செய்ய விரும்பினால் அவருக்கு ஒரு நற்சான்றுப் பத்திரம் கொடுத்துதவலாம். அப்படியல்லாது அவரை ஆதரிக்கவோ அல்லது பிரசாரம் செய்யவோ எத்தனித்தால் குறித்த விண்ணப்பக்காரரின் மனுத் தள்ளு படியாவதற்குக் காரணமாக இருந்தவராவார் ;

(கௌ) தெரிவின் பின் பிழையானவை எனக் காணப்படின் அவைகள் எந்நேரத்திலும் தள்ளுபடி செய்யப்படலாம். சேர்க்கப்பட்ட பின் பிழையானவை எனக் காணப்படின் அவர்கள் இராணுவத்தில் இருந்து விலக்கப்படுவதுமல்லாமல் தண்டனைக்கும் உள்ளாவார்கள்.

இராணுவ தலைமைக் காரியாலயம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு, 1964 ம் ஆண்டு மார்ச்சு மீ 14 ந் உ.

ஏ. ஆரியப்பெருமா,
கப்டன்,
இராணுவத் தளபதிக்காக.

## மாதிரி விண்ணப்பப் பத்திரம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) : ————.
2. தபால் விலாசம் : ————.
3. அருகாமையிலுள்ள தபால்/தந்தி நிலையம் : ————.
4. அருகாமையிலுள்ள பொலீஸ் நிலையம் : ————.
5. பிறந்த திகதி : ————, வயது : ————.
(பிறப்புச் சான்றுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
6. தேசிய இனம் : ————.
7. சேர விரும்பும் பிரிவு : ————.
(1-ம் பந்தியின் பிரகாரம் கூறு, நியமனம் ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட வேண்டும்)
8. முதல் இராணுவத்தில் சேவை செய்திருந்தால் பிரிவும் திகதிகளும் : ————.
9. இராணுவத்திலிருந்து விலகியபொழுது உமது நடத்தை : ————.
(இராணுவத்திலிருந்து விலகிய அல்லது விலக்கப்பட்ட சான்றுப் பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
10. இராணுவம் (யுத்த கால சேவையுட்பட) கடற்படை, ஆகாயப்படை, தொண்டர் படை ஆகிய பிரிவுகளில் சேவை செய்திருந்தால் பிரிவு, திகதிகள் ஆகியவற்றுடன் பூரண விபரம் தருக : ————.
11. சித்தியடைந்துள்ள பரீட்சைகள் (பாடங்கள், திகதிகள் ஆகியவற்றுடன்) : ————.
(கல்விச் சான்றுப்பத்திரப் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
12. வேறு தகுதிகள் இருப்பின் (விளையாட்டுக்கள் சம்பந்தமானவை உட்பட) : ————.
13. பாடசாலையை அல்லது கல்லூரியை விட்ட பிற்பாடு செய்த தொழில்கள் : ————.
14. விளம்பரத்தில் 1-ம் பந்தியின் பிரகாரம் நீர் கூடுதலான தகுதியுடையவரா ? அப்படியாயின் பூரண விபரம் தருக : ————.
15. உயரம் : ————அடி————அங்குலம் :
16. விளம்பரத்தின் 5-ம் பந்தி (க) (3) பிரகாரம் நற்சான்றுப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிகளும் :—
    1. ————.
    2. ————.
    3. ————.
17. விண்ணப்பக்காரர் கையொப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டிய உறுதி :—
மேலே கேட்கப்பட்ட கேள்விகளுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகளும் தகுதிகளும் எனது அறிவிற்கெட்டியவரையில் சரியானவை என்று உறுதிப்படுத்துகிறேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

3-677—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை அரச விமானப் படை

கட்டுநாயக்கா, இலங்கை அரச விமானப்படை நிலையத்திலிருக்கும் கீழ்க் காணும் மீட்கப்பட்ட பொருட்கள் (Salvage) விற்பனைக்கான மெழு கிட்ட கேள்விப்பத்திரங்களை கொழும்பு பாசன் வீதியிலுள்ள இலங்கை அரச விமானப்படையின் தலைவர் 1964 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3 ம் திகதி முற்பகல் 9.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

(அ) ஈயமும் செம்பும் 6720 இறுத்தல் கிட்டத்தட்ட.

(ஆ) இரும்பு உலோகம் 10,300 இறுத்தல் கிட்டத்தட்ட.

கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாக ரூபா 50 கொழும்பு, பாசன் வீதி யிலுள்ள விமானப்படை நிலையத்திலிருக்கும் சிவில் பரிபாலன உத்தி யோகத்தரும் கணக்காளரும் என்பவரிடம் கட்டிய பின்னரே கேள்விப் பத்திரப்படிவங்கள் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரப்படிவங்கள் 1964 ஏப்ரல் மாதம் 2 ம் திகதி நண்பகல் 12 மணிவரை கொடுக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இருபிரதிகளாக உறையிலிட்டு மெழுகிட்டு அவ் வுறையின் மேற்புற இடது மூலையில் "மீட்கப்பட்ட பொருட்கள் விற் பனைக்கான கேள்விப்பத்திரம்" எனக் குறிப்பிட்டு விமானப்படைத் தலைவர், இலங்கை அரச விமானப்படை, பாசன் வீதி, கொழும்பு என விலாச மிட்டு அனுப்பவும்.

கேள்விப்பத்திரங்கள் முதலாம் பந்தியிற் குறிப்பிட்ட திகதி, நேரம், இடத்தில் பரிசீலனை செய்யப்படும் அவ்வேளையில் கேள்விப்பத்திரக் காரர்கள் யாபேரும் பிரசன்னமாகவிருக்க அனுமதிக்கப்படுவர். கேள் விப்பத்திரக்காரர்களில் யாராயினும் கேள்விப்பத்திரங்களில் எதையேனும் பரிசீலனை செய்யவிரும்பின் விமானப்படைத் தலைவருடன் ஒழுங்குசெய்த பின்னர் அக்கேள்விப் பத்திரத்தின் பிரதியைப் பரிசீலனை செய்ய அனுமதிக்கப்படுவர்.

ஈ. ஆர். அமரசேகரா,
எயர் கொமடோர்,
விமானப்படைத் தலைவர்.

3–787—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ராஜாங்கணை உட்பிரிவு

ராஜாங்கணைத் திட்டத்தில் தண்ணீர் குழாய்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள வட மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு சித்திரை மாசம் 15 ம் திகதி புதன்கிழமை காலை 11 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும். கேள்விப்பத்திரம் இலக்கம் RL 5.

2. நீர்ப்பாசன திணைக்களத்தில் ரூபா 45,000 த்துக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் ராஜாங்கணை, தம்புத்த கமத்திலுள்ள நீர்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலு வலக நேரங்களில் 1964 ம் ஆண்டு சித்திரை மாசம் 10 ம் திகதி வரைக் கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப் பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாள ருக்குப் பயன்படும். வெற்றிப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக் கேள்வியைப் பற்றிய மேகதிகமான விபரங்கள் எல்லாவற்றை யும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சி. சி. டி பெனூன்டோ,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
ராஜாங்கணை உட்பிரிவு.

தம்புத்தகம,
1964 ம் ௵ மார்ச் ௴ 6 ந் உ.

3–605—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மினிபே உப பிரிவு

பிரதான வாய்க்காலிலும், சேவை வீதியிலும் பரல் ஒழுங்கு பண்ணிக் கொடுப்பதற்கும் (ii) 12 க 4,000 அடி—13 க 1,220 அடி வரைக்கும் மண வேலைகள் செய்வதற்கும் கேள்விப்பத்திரங்கள், மத்திய மாகாணம் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் (கண்டி) அவர்களால் 15.4.64 புதன்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்னர் உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 42,000 அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரகள் மட்டுமே இக் கேள்விப்பத்திரங கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள் (i) ரூபா 50,000 மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களும், மட்டுமே (ii) டாவது கேள்வி சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள்.

3. இக் கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் மினிபேயில் உள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 லாம் ஆண்டு எப்பிறல் மாதம் 14 லாம் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைகளத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில வெளிப்படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப அனு மதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்கு பயன் படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியிய லாளரின் அலுவலகத்தில் 50 ரூபா கேள்விக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக் கேள்விப் பணத்தை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

இக் கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங் களில் பெற்றுக் கொள்ளலாம்.

யே. ஏ. யே யயசூரிய,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மினிபே உப–பிரிவு.

மினிபே,
1964 ம் ௵ பெப்ரவரி ௴ 24 ந் உ.

3–665—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசன இலாகா

வட கிழக்குப் பகுதி பொலநறுவை பெரும்பாக நீர்ப்பாசனப் பகுதி பொறியியலாளர் அவர்களால் கவுடுல்ல உபபகுதியில் எட்டு அறை நிரந்திரக் கட்டிடம் ஒன்று கட்ட 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 21 ந் திகதி 10 மணி வரை நீர்ப்பாசன இலாகாவில் பதிவு செய்யப்பட் டிருக்கும் ஒப்பந்தக்காரரிடம் இருந்து கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர் ரூபா 30,000 அல்லது மேற்பட பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 3.4.1964 தொடக்கம் 17.4.1964 வரை கவுதுல்ல உபபகுதி நீர்ப்பாசன பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள லாம். வேறு விபரங்களும் மேல் கூறப்பட்ட இலாகாவில் பெற்றுக் கொள்ளலாம். இவ்வேலைக்கு வைப்புப் பணம் ரூபா 50. கேள்வி பத்திரங்கள் இரட்டைப் பிரதியாக அனுப்பப்படவேண்டும்.

எவ்வித் ஆயுதங்களும் கொடுக்கப்படமாட்டாது. சீமந்து மாத்திரம் கொடுக்கப்படும். கவுதுல்ல உபபகுதி நீர்பாசன பொறியியலாளர் கூறியபடி வேலை செய்யப்படவேண்டும்.

அ. பி, டயஸ் அபெயசிங்க,
கவுதுல்ல உபபகுதி நீர்ப்பாசன பொறியியலாளர்

மின்னேரியா,
1964 ம் ௵ மார்ச் ௴ 13 ந் உ.

3–688—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நுவரெலியா உப-பிரிவு

கீழ்காட்டிய வேலைகளுக்கு கேள்விப்பத்திரங்கள் கண்டியில் உள்ள மத்திய பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு எப்ரெல் மாதம் 15 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணி வரைக்கும் எற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கீழ் காடிய ரூபாவிற்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக் கேள்விப்பத்திரஙகளைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் விபரம் | பதிவுசெய்யப்பட்டதொகை |
|---|---|
| (1) கிணவலை குளம் கட்டுதல் .. | ரூபா 40,000 ம் அதற்கு மேலும் |
| (2) மணகன்வெடியா அணை கட்டுதல் | ரூபா 25,000 ம் அதற்கு மேலும் |

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் நுவரெலியாவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியிலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு எப்ரெல் மாதம் 11 ம் திகதி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப் பத்திரங்களை அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மைலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும். அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். இவ்வேலைகளுக்கு சீமெந்து, இரும்புக்கம்பிகள் கொடுக்கப்படும்.

எ. எஸ். டி சில்வா,
நீர்ப்பாசன பொறியியலாளர்.
நுவரெலியா உப-பிரிவு.

3-551—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மன்னார் உப பகுதி

வியாட்டிக் குளத்தின் கீழ் உள்ள நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுத்தலுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட மாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 14 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிவரைக்கும் எற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 40,000 ம் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் மன்னாரில் உள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 4.4.64 துவக்கம் 10.4.64 வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்று அறிய நீர்ப்பாசன பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கேள்விப்பத்திரக் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விப்பத்திரக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

இக் கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பசானப் பொறியியலாளர், மன்னார் உபபகுதி.

முருங்கன்,
1964 ம் ௵ மார்ச் மீ 11 ந் உ.

3-687—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசன இலாகா

யாழ்ப்பாண உப பிரிவின் கீழ் உள்ள இரணமடு வலதுகரை அணுகு பாலத்திற்கு அருகாமையில் நீரிடைப்பாதை அமைப்பதற்கு ஆகிய வேலைகான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 1 ல் உள்ள செயலகத்தின் 355 ம் இலக்க அறையிலுள்ள காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப்பத்திரச் சபைத் தலைவர் அவர்களால் 1964 ம் ஆண்டு எப்ரல் மாதம் 21 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் எற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதியிலே ரூபா 80,000 க்கும் அதற்குமேலும் பதிவுசெய்துள்ள இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்புந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். வவுனியாவில் உள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதிகொண்ட விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த எனைய கச்சேரியொன்றில் ரூபா 100 கேள்விப்பத்திரக் கட்டுப்பணமாகக் கட்டிப்பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 1964 ம் ஆண்டு எப்ரல் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிகமான விபரங்கள் வவுனியாவிலுள்ள பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கொழும்பு,
1964 ம் ௵ மார்ச் மீ 11 ந் உ.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

3-690—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஹக்வட்டுன ஓயாத் திட்டம்

ஹக்வட்டுன ஓயாத்திட்டத்தில் வலது பக்க வாய்க்காலின் கீழ்வரும் 3 வது பக்கத்தில் உள்ள வாய்க்கால்கள் முதலியன வெட்டுவதற்காக கேள்விப்பத்திரங்கள் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர் அவர்களால் (வட மேல் மாகாணம், குருநாகல்) 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 28 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரையும் எற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடன் திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 45,000 ரூபாவுக்கு அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் ஹக்வட்டுன ஓயா, மகுள்பொத்தையிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 17.4.64 லில் இருந்து 24.4.64 வரையும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியினராக முன்வருவோர்கள் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்பதற்கு நீர்ப்பாசன பொறியியலாளருக்கு பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50 கள்விக்கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஜே. ஏச். ஹென்ஸ்மன்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
ஹக்வட்டுன ஓயாத் திட்டம்.

மகுள்பொத்த,
1964 ம் ஆண்டு மார்ச் மாதம் 4 ந் தேதி.

3-770—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல். 13,992

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாண உப பிரிவு

நீர்ப்பாசன இலாகா யாழ்ப்பாண உப பிரிவு பகுதிக்குச் சேர்ந்த பின் வரும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வவுனியாவிலுள்ள வட பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 14.4.1964 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப் படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் பெயர் | பதிவுத் தொகை ரூ. ச. | கேள்விக் கட்டணம் ரூ ச |
|---|---|---|
| (1) அக்கராயன் குளத்து இடது கரை பெரும் வாய்க்காலின் கீழ் உள்ள 2 ம் இலக்க பிரிவு வாய்க்கால் வெட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் .. | 45,000 0.. | 50 0 |
| (2) கரியாலை நாகபட்டுவான் வலது கரை பெரும் வாய்க்கால் வெட்டுவதற்கான கேள்விப் பத்திரங்கள் .. | 45,000 0.. | 50 0 |
| (3) கரியாலை நாகபட்டுவான் வலது கரை பெரும் வாய்க்கால் 1 ம் பகுதியிலுள்ள 1 ம் இலக்க பிரிவு வாய்கால் வெட்டுத லும் அதன் கீழ் உள்ள கிளை வாய்க் கால்களுக்கு கட்டுவேலை செய்யவதற் குமான கேள்விப்பத்திரங்கள் ... | 25,000 0.. | 25 0 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேல் குறிப்பிட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் கிளிநொச்சியிலுள்ள யாழ்ப்பாண உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 23.3.64 திங்கட்கிழமை தொடக்கம் 10.4.64 வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இந்தத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பக்கத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப் படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குவதற்கு முன் நீர்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைக்கும் மேற்குறிப்பிட்ட தொகையைக் கேள்விக்கட்டணமாகக் கட்டப்பட்ட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமாக விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அ. செல்லப்பா,
யாழ்ப்பாண உப பிரிவு நீர்ப்பாசனப்
பொறியியலாளர்.

கிளிநொச்சி,
1964 ம் ஆண்டு மார்ச்சு மீ 12 ந் உ.

3–774—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உப பிரிவு

கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 15 ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிவரை கீழ்க்காணும் வேலைக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் அதன் பின்பு கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப் படும்.

| | பதிவுத் தொகை |
|---|---|
| மெனிக்தென்ன குளம் புனருத்தாரணம் செய்தல் .. | ரூ. 29,000.00 |

2. மேலே கொடுத்துள்ள வேலைக்கு எதிரேஉள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசனத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவு காரர்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் விண்ணப்பிக்கத் தகுதியுள்ளவர்கள்.

3. இதற்குத்தேவையான வெற்று விண்ணப்பப்பத்திரங்கள் மாத்தளையிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் 1964 ம் ஆண்டு சித்திரை மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். வெற்று விண்ணப்பப் பத்திரங்கள் பெறவருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் மாத்தளை நீர்ப்பாசனப்பகுதி பொறியியலாளரின் பார்வைக்குச் சமர்ப்பிக்க வேண்டும். வெற்று விண்ணப்பப்பத்திரங்கள் பெறவிரும்புவோர் கேள்விக்கட்டணமாக ரூபா 50.00 மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அல்லது கச்சேரியில் செலுத்தி பற்றுச்சீட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

4. கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் கேள்விக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை.

5. இது சம்பந்தமாக மேலதிக விபரங்கள் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. பூபாலசிங்கம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
மாத்தளை உபபிரிவு.

3-765-20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

---

## இலங்கை உருக்குக் கூட்டுத் தாபனம்

### சீமெந்துக் காலி உறைகள் விற்பனைக்கான கேள்விப்பத்திரம்

அத்துருகிரியாவிலுள்ள, இலங்கை உருக்குக் கூட்டுத் தாபனத்தில், வார நாட்களில காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையில் பார்வைக்குள்ள சீமெந்துக் காலியுறைகள் சுமார் 2,000 ம் வாங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 27.3.1964 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கீழே குறிக்கப்பட்டுள்ளவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

100 உறைகளைக் கேள்விப்பத்திரத்தில் அளவையாக எடுக்கப்பட வேண்டும்.

வினியோக உத்தியோகஸ்தர்.

இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்,
அத்துருகிரியா.

3–760—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

## கல்விப் பகுதி

கீழ்க்குறிப்பிடப்படும் பாடசாலை சம்பந்தமாகக் கேள்விப்பத்திரங்கள் கொழும்பு கல்விக் காரியாலய கேள்விச் சபைத் தலைவரால் 1964 ம் ஆண்டு எப்றல் மாதம் 10 ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் |
|---|---|
| அக்/அக்கரைப்பற்று முஸ்லீம் மகா வித்தியாலயம் .. | 6 வகுப்பறை கட்டுதல் |

(2) இவ்வேலைக்கான கேள்விப்பத்திரங்கள், கல்வி இலாகாவினுலும், பகிரங்க வேலைப் பகுதியினுலும், கீழே குறிக்கப்பட்டுள்ள தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட கொந்திருத்துக்காரர்களுக்கும், கிராம முன்னேற்றச் சங்கங்களுக்கும், பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கும், வழங்கப் படும்.

**குறிப்பு.**—கல்விப் பகுதி ரூபா 24,000.
பகிரங்கவேலைப்பகுதி ரூபா 24,000.

ஒவ்வொரு வேலைக்கும் கொழும்பு வித்தியாதிபதி கந்தோர், A.O. கிளை, அல்லது வெளியூராகில் அப்பகுதிக் கச்சேரியிலோ ரூபா 100 பிணைப்பணம் கட்டியதாகக் கிடைக்கும் பற்றுச்சீட்டை அக்கரைப்பற்று கல்வி அதிகாரி அவர்களிடம் சமர்ப்பித்துக் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

(3) 1964 ம் ஆண்டு எப்றல் மாதம் 9 ந் திகதி 12 மணி வரையுமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். காசோலைகள், மணி ஓடர்கள், போஸ்டல் ஓடர்கள் முதலியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(4) கேள்விப்பத்திரங்கட்குப் பிணைப்பணம் கட்டுவதற்கான பத்திரங்கள் கொழும்பு வித்தியாதிபதி கந்தோர், S.W. கிளை, அல்லது அக்கரைப்பற்றுக் கல்வி அதிகாரி அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். 2 ம் பிரிவில் சொல்லப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப் பட்டதாக அத்தாட்சி சமர்ப்பித்தவர்கட்கு மட்டுமே பிணைப்பணம் கட்டு வதற்கான பத்திரம் வழங்கப்படும்.

(5) பதிவு செய்த தபால் மூலம் அனுப்ப விரும்பாத உள்ளூர் விண்ணப்பக்காரர்கள் நேரிலோ அல்லது தங்கள் பிரதிநிதிகள் மூலமோ சீல் பண்ணப்பட்ட கேள்விப்பத்திரங்களை அக்கரைப்பற்றுக் கல்விக் காரியாலய உதவியாளரிடம் சேர்ப்பித்து அவைகளைப் பெற்றுக்கொண்ட தற்கு அத்தாட்சியாக அவரிடம் கடிதம் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் உறைகளின்மீது வேலையின் விபரங் களும், விண்ணப்பக்காரர் பெயரும், விலாசமும், எழுதப்படவேண்டும். அக்கரைப்பற்றுக் கல்விக் காரியாலயத்தில் இவ்வேலைகட்குரிய படங் களும் மற்றும் விபரங்களும் பார்வையிடலாம்.

(6) 1964 ம் ஆண்டு எப்றல் மாதம் 10 ந் திகதி பி. ப. 2.30 மணிக்கு விண்ணப்பப் பத்திரங்கள் பரிசீலனை செய்யப்படும். கேள்விப் பத்திரங்களைத் திறந்துபார்வையிடும்போது விண்ணப்பக்காரர் பிரசன்னமா யிருக்க அனுமதிக்கப்படுவர். பிரசன்னமாயிருக்கும் விண்ணப்பக்காரர் களுக்கு விண்ணப்பத் தொகைகளும் விண்ணப்பக்காரர்களின் பெயர் களும் வாசித்துக்காட்டப்படும்.

(7) விண்ணப்பம் முடிந்த திகதியிலிருந்து ஆறு வாரங்கள் வரை யிலுமே விண்ணப்பங்கள் செல்லுபடியாக இருக்கும்.

(8) இவ்வேலைகள் செய்யப்படும்பொழுது இலங்கையரும் குறிப்பிட்ட வேலைநடக்கும் பிரதேசத்தில் வசிப்பவருமான வேலையாட்களையே அமர்த்த வேண்டும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகச் சேர்க்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர் இந்த நிபந்தனையின்படி ஒழுகத் தவறினுல் அத்தவறு ஒப்பந்தச் சரத்துக்களை மீறியதாகக் கருதப்பட்டு ஒப்பந்தம் ரத்துச்செய்யப்படக் கூடும். எனினும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் கல்வி அதிபர், கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியின் சம்மதத்துடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர், இலங்கைய ரல்லாத வேலையாட்களையோ அல்லது வேலைநடக்கும் பகுதியில் வசிக் காத இலங்கை வாசியான் வேலையாட்களையோ அமர்த்துவதற்கு அனு மதிக்கப்படுவர். இந்த அனுமதியில்லாமல் இலங்கையரல்லாத வேலை யாட்களையோ அல்லது வேலை நடக்கும் பகுதியில் வசிக்காத இலங்கை வாசியான வேலையாட்களையோ வேலைக்கமர்த்துவது தவிர்க்கப்பட்டுள்ளது.

(9) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் ஓடுகள் பாவிக்க வேண்டிய கட்டிடங்கட்கு உள்நாட்டில் தயார் செய்யப்பட்ட நவீன ரக ஓடுகளையே பாவிக்க வேண்டும். கட்டிட மேற்பார்வையாளரிடம் உள் நாட்டில் தயார் செய்யப்பட்ட ஓடுகள் நல்ல ரகத்தில் பெறமுடியாதென அத்தாட்சிப் படுத்தினுலன்றி வேறு எவ்வித ஓடுகளும் பாவிக்க அனுமதி அளிக்கப்படமாட்டாது. ஓடுகளின் தராதரத்தை நிச்சயப்படுத்த வேண்டிய சோதனைகள் இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் விண்ணப்பக்காரர்கள் செலவில் நடத்த வேண்டும். இது மாத்திரமன்றி தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பக்காரர்கள் தாங்கள் உபயோகிக்க விருக்கும் ஓடு, கல் சில வற்றையும், அவ்வோடுகள் சகல பிரமாணங் களுக்கும் அமைவாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறதென்பதற்கு அத்தாட்சி யாக இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் கூடத்தில் அத்தாட்சிப்பத்திரம் ஒன்றையும் சமர்ப்பித்து மேற்பார்வையாளர்களின் அங்கீகாரம் பெறவேண்டும்.

எம். எஸ். எம். ஹத்தாத்,
வித்தியாதிகாரி, அக்கரைப்பற்று.

கல்விக் காரியாலயம், அக்கரைப்பற்று,
1964 ம் ஆு மார்ச் மீ 12 ந் வ.

3-686—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

## நீர்ப்பாசன இலாகா

| வேலையின் விபரம் | கிடைத்துள்ள கேள்விப்பத்திரங்களின் தொகை | ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பக் காரரின் பெயர் | ஏற்றுக்கொள்ளப்பட்ட தொகை |
|---|---|---|---|
| காரியாலை நாகபட்டுவான் குளத்தின் வட சுற்றயலில் உள்ள இடைவெளியை நிரப்புதல் | 1 | எஞ்ஜினியறிங் கொன்ஸ்றக்ஸன் (சிலோன்) லிமிட்ட், கொழும்பு | ரூபா. 97,000/- |

ஆர். எஸ். தர்மானந்தர்,
பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர், வட பகுதி.

வவுனியா, 1964 ம் ஆு மார்ச் மீ 13 ந் வ.

3-691—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பொலிஸ் இலாகா

### பாவனைக்குதவாத அங்கிகள் விற்பனைக்கு

இதனுல் அறியத்தருவது யாதெனில், பல பாவனைக்குதவாத அங்கிகளும் மற்றும் பல சாமான்களும் 28.3.64 சனிக்கிழமை 9.30 மணிக்கு எனது ஸ்தாபனத்தில் ஏலவிற்பனை செய்யப்படும்.

இச்சாமான்களுக்குரிய பெறுமதியை உடனே செலுத்திய பின்புதான் சாமான்கள் கொண்டு செல்ல அனுமதிக்கப்படும்.

பொலிஸ் அதிகாரி,
வ. மே. மாகாணம், குருநாகல்.

பொலிஸ் காரியாலயம்,
குருநாகல்,
1964 ம் ஆு பங்குனி மீ 6 ந் வ.

3—510—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

# நானாவிதம்

## உங்கள் மாடுகளுக்கு நிலையான உத்தரவாத விலைகள்

மேலதிகமானதும் வளர்ப்புக்கு உதவாததுமான மாடுகளை அவற்றின் சொந்தக்காரர் விற்பனவு செய்தற்கு வாய்ப்பு அளித்தற்பொருட்டு மேவசாயப் பகுதி பின்வரும் விலைகளில் மாடுகளை இறைச்சிக்காகக் கொள்முதல் செய்ய இருக்கின்றது.

1. கொழும்பு கொம்பனித்தெருவிலுள்ள தொற்றுநோய் பரவாத் தடை நிலையத்துக்குப் பொறுப்பான கால்நடை வைத்தியரிடம் ஒப்படைக்கும் அல்லது அவருக்கு கோட்டை புகையிரத நிலையத்துக்கு அந்நிலையத்துக்குப் பொறுப்பான அதிபர் மேற்பார்த்து அனுப்பப்படும் மாடுகளுக்கு அவற்றின் உயிர் மிருக நிறை இருத்தல் ஒன்றுக்கு 32 சதவிகிதம் கொடுக்கப்படும்.

கமத்தொழிற்றிணைக்களத்தினால் கொழும்பிலிருந்து உள்ள தூரத்திற் கேற்ப செய்யப்படும் கொள்முதல் விலைகள் :—

2. 25 மைல்கள் வரை உயிர் மிருக நிறை இருத்தல் ஒன்று—30 சதம்.

3. 25-50 மைல்கள் வரை உயிர் மிருக நிறை இருத்தல் ஒன்று—29 சதம்.

4. 50-75 மைல்கள் வரை உயிர் மிருகநிறை இருத்தல் ஒன்று—28 சதம்.

5. 75-100 மைல்கள் வரை உயிர் மிருகநிறை இருத்தல் ஒன்று—27 சதம்.

6. 100 மைல்களுக்கு மேற்பட உயிர் மிருகநிறை இருத்தல் ஒன்று—26 சதம்.

மேலே முதலாம் இரண்டாம் பிரிவின்படி விற்பனவு செய்வோர் தயவு செய்து கால்நடை வைத்தியர், தொற்றுநோய் பரவாத்தடை நிலையம், கொம்பனித்தெரு, கொழும்பு, என்னும் முகவரியாளரை நாடிக்கொள்க. மற்றைய முறைகளில் விற்பனவு செய்ய விரும்புவோர் அவரவரின் வட்டாரத்துக்குரிய கானடைவைத்தியரை நாடிக்கொள்ளலாம்.

பிற விபரங்களை :

விலங்கு உற்பத்தி, சௌக்கிய பிரதி அதிபதி, கமத்தொழிற் பகுதி, தபால் பெட்டி 536, கொழும்பு, என்னும் முகவரியாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

3-587—20.3.64 ந் திகதிய வர்த்தமானி இல. 13,992

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில் இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.